பக்கங்கள் 17+3

மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2056 | வைகாசி 30 வெள்ளிக்கிழமை 13.06.2025 | அதிர்வு 314

## அனைவருக்கும் நன்றி தெரிவித்த சுமந்திரன்

(எஸ்.நிதர்ஷன்)

“யாழ்ப்பாணம் மாநகர சபையின் ஆட்சியை இலங்கைத் தமிழரசுக் கட்சி 04▶



‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



### ஈ.பி.டி.பியின் ஆதரவுடன்

# யாழ். மாநகர சபையை கைப்பற்றியது தமிழரசு

## மேயராக மதிவதனி தெரிவு; துணை மேயரானார் தயாளன்

(எஸ். நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் மாநகர சபையின் ஆட்சியை இலங்கைத் தமிழரசுக் கட்சி கைப்பற்றியுள்ளது. அந்தக் கட்சியின் உறுப்பினர் திருமதி. மதிவதனி விவேகானந்தராஜா மேயராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

யாழ். மாநகர சபையின் மேயரைத் தெரிவு செய்வதற்கான கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை காலை யாழ். மாநகர சபை சபா மண்டபத்தில் நடைபெற்றது.

யாழ். மாநகர சபை 45 உறுப்பினர்களைக் கொண்ட சபையாகும். 04▶








### தமிழரசுக் கட்சியின் ஆதரவுடன்

# நல்லூர் பிரதேச சபையின் ஆட்சியைக் கைப்பற்றியது தமிழ் மக்கள் கூட்டணி!

## தவிசாளராக மயூரன் ஏகமனதாகத் தெரிவு

(எஸ்.நிதர்ஷன்)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஆதரவுடன் நல்லூர் பிரதேச சபையின் ஆட்சியைத் தமிழ் மக்கள் கூட்டணி கைப்பற்றியுள்ளது.

அதற்கமைய நல்லூர் பிரதேச சபையின் தவிசாளராகத் தமிழ் மக்கள் கூட்டணியின் உறுப்பினர் பத்மநாதன் மயூரன் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்.

நல்லூர் பிரதேச சபையின் தவிசாளரைத் தெரிவு செய்வதற்கான கூட்டம் இன்று பிற்பகல் நல்லூர் பிரதேச சபையின் சபா மண்டபத்தில் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் தேவநந்தினி பாபு தலைமையில் நடைபெற்றது.

இதன்போது தவிசாளர் மற்றும் உப தவிசாளர் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

இதன்படி தமிழ் மக்கள் கூட்டணியின் தவிசாளர் பதவிக்கு மயூரனின் பெயர் சபையில் முன்மொழியப்பட்டது.

வேறு போட்டியாளர் இன்மையால் தவிசாளராக மயூரன் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அதையடுத்து உப தவிசாளராகத் தமிழரசுக் கட்சியின் இராஜமனோகரன் ஜெயகரன் தெரிவு செய்யப்பட்டார்.

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் உறுப்பினர் கணேஷ், தவிசாளர் மற்றும் உப தவிசாளர் தெரிவுகளின் போது சபையில் இருக்கவில்லை.

20 உறுப்பினர்களைக் கொண்ட நல்லூர் பிரதேச சபையில் இலங்கைத் தமிழரசுக் கட்சி 7 ஆசனங்களையும், தமிழ் மக்கள் கூட்டணி 6 ஆசனங்களையும், தேசிய மக்கள் சக்தி 3 ஆசனங்களையும், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி 3 ஆசனங்களையும், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி ஓர் ஆசனத்தையும் கொண்டுள்ளன.

தமிழ் மக்கள் கூட்டணியும், இலங்கைத் தமிழரசுக் கட்சியும் நல்லூர் பிரதேச சபையில் ஆட்சி அமைப்பது தொடர்பில் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை நேற்றுமுன்தினம் மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.







### திருவுளச்சீட்டு மூலம்

# சாவகச்சேரி நகர சபை ஆட்சி தமிழ்த் தேசியப் பேரவை வசம்

(த.சுபேசன்)

திருவுளச்சீட்டு ஊடாக சாவகச்சேரி நகர சபையின் ஆட்சியை அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைமையிலான தமிழ்த் தேசியப் பேரவை கைப்பற்றியுள்ளது.

சாவகச்சேரி நகர சபையின் தவிசாளர் மற்றும் உப தவிசாளர் தெரிவுகள் இன்று பிற்பகல் 3 மணியளவில் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் தேவநந்தினி பாபு தலைமையில் நடைபெற்றது.

தவிசாளர் பதவிக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் அ.கயிலாய பிள்ளையும், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைமையிலான தமிழ்த் தேசியப் பேரவை சார்பில் வ.சிறிபிரகாஸும் முன்மொழியப்பட்டு பகிரங்க வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

இதன்போது இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தவிசாளர் வேட்பாளர் அ.கயிலாயபிள்ளை தமிழரசுக் கட்சி மற்றும் ஈ.பி.டி.பி. உறுப்பினர்களுடைய ஆதரவுடன் 7 வாக்குகளைப் பெற்றார்.

அதேநேரம் தமிழ்த் தேசியப் பேரவையின் தவிசாளர் வேட்பாளர் வ.சிறிபிரகாஸுக்கும் 7 வாக்குகள் கிடைத்தன.

அதன்பின்னர் திருவுளச்சீட்டு ஊடாக தவிசாளர் தெரிவு செய்யும் நடைமுறைக்குச் செல்லப்பட்டதில் தமிழ்த் தேசியப் பேரவையின் தவிசாளர் வேட்பாளர் வ.சிறிபிரகாஷ் தவிசாளராகத் தெரிவு செய்யப்பட்டார்.

மேலும் உப தவிசாளர் தெரிவிலும் இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் அ.பாலமயூரனும், தமிழ்த் தேசியப் பேரவை சார்பில் ஞா.கிஷோரும் போட்டியிட்டு சம வாக்குகளைப் பெற்றிருந்த நிலையில் திருவுளச்சீட்டு மூலம் தமிழ்த் தேசியப் பேரவையின் உறுப்பினர் கிஷோர் தெரிவு செய்யப்பட்டார்.

வாக்கெடுப்பின் போது தேசிய மக்கள் சக்தி நடுநிலைமை வகித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைமையிலான தமிழ்த் தேசியப் பேரவையின் சார்பில் சாவகச்சேரி நகர சபைக்குப் பிரேரிக்கப்பட்ட பெண் உறுப்பினர் ஒருவருக்கு உயர்நீதிமன்றத்தால் இன்று இடைக்காலத் தடை விதிக்கப்பட்டிருந்த நிலையிலேயே திருவுளச்சீட்டு நடைமுறை வரை செல்ல வேண்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது.





# பேராசிரியர் சி.தில்லைநாதன் காலமானார்



சிரேஷ்ட தமிழ் ஆர்வலர் பேராசிரியர் சி. தில்லைநாதன் நேற்றையதினம் காலமானார்.

1937 மே 03ஆம் திகதி யாழ்ப்பாணம், சுன்னாகத்தில் பிறந்த இவர், இலங்கை பேராதனை பல்கலைக்கழகத்தில், B.A.(Hons) பட்டம் (1961), அதே பல்கலைக்கழகத்தில் M.A.(1964), பின்னர் இந்தியாவின் சென்னை ஆ.டுவைவ.(1969) என உயர்கல்வியைப் பெற்றவர்.

அவர் தனது பணிப்பயணத்தை 1961 ஆம் ஆண்டு கொழும்பில் "தினகரன்" பத்திரிகையில் செய்தியாளராக துவங்கி, 1964 முதல் பல்கலைக்கழகக் கல்விப் பணிகளில் இணைந்தார்.

பின்னர் வித்தியோதயா பல்கலைக்கழகம் மற்றும் இலங்கைப் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் உதவிக் விரிவுரையாளராக, பின்னர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளர், சிரேஷ்ட விரிவுரையாளர், இணைப் பேராசிரியராகி, 1991 முதல் ஓய்வு பெறும் வரை தமிழ் துறைத்தலைவராகவும், பேராசிரியராகவும் பணியாற்றியுள்ளார்.

கல்வித்துறையில் மட்டுமன்றி, இலங்கைத் கல்வி பரீட்சைத் திணைக்களத்தில் சிரேஷ்ட பரீட்சகராகவும் அவர் கடமையாற்றியுள்ளார்.

தமிழ் இலக்கியம் மற்றும் கலாசார ஆய்வுகளில் ஆழ்ந்த பங்களிப்பு செய்த இவர், 1974 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற Tamil Studies மாநாட்டில் "Recent trends in Ceylon Tamil literature" என்ற தலைப்பில் ஆற்றிய உரை தமிழ் கல்வி வரலாற்றில் நினைவுகூரத்தக்கது என கூறப்படுகிறது.

பல நூல்கள், கட்டுரைகள், கல்வித் திட்டங்கள், மாணவர் வழிகாட்டுதல்கள் என அவர் விட்டுச் சென்ற கல்வித் தடங்கள் காலத்தால் அழியாதவை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை தமிழியல் வளர்ச்சிக்காக செய்த பங்களிப்புக்காக, 1961-ல் University of Ceylon Scholar விருது, 1993-ல் "Kalakkia Semmal", 1994-ல் Kala Keerthi எனும் இலங்கையின் உயரிய தேசிய கலைக்கௌரவம் ஆகிய விருதுகளையும் இவர் பெற்றுள்ளார்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## யாழ். மாநகர சபையை...

இலங்கைத்தமிழரசுக் கட்சி 13 ஆசனங்களையும், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் 12 ஆசனங்களையும், தேசிய மக்கள் சக்தி 10 ஆசனங்களையும், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி மற்றும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி ஆகியன தலா 4 ஆசனங்களையும், ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி ஆகியன தலா ஓர் ஆசனங்களையும் பெற்றுள்ளனர்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் மேயர் பதவிக்குத் திருமதி. மதிவதனி விவேகானந்தராஜாவின் பெயரும், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் சார்பில் மேயர் பதவிக்குக் கனகையா ஸ்ரீ கிருஷ்ணாவின் பெயரும் பரிந்துரைக் கப்பட்டன.

தேசிய மக்கள் சக்தியின் சார்பில் மேயர் பதவிக்கு எவரும் பரிந்துரைக்கப் படவில்லை.

மேயர் தெரிவு பகிரங்க வாக்கெடுப்பு மூலம் இடம்பெற்றது. அதன்போது, தமிழரசுக் கட்சி, ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் தமிழரசுக் கட்சியின் சார்பில் போட்டியிட்ட திருமதி. மதிவதனி விவேகானந்தராஜாவுக்கு வாக்களித்தனர். அதன்மூலம் அவர் 19 வாக்குகளைப் பெற்று மேயராகத் தெரிவானார்.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் சார்பில் மேயர் பதவிக்குப் போட்டியிட்ட கனகையா ஸ்ரீ கிருஷ்ணா 16 வாக்குகளை மாத்திரம் பெற்றார். அவருக்கு ஆதரவாக அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் மற்றும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் உறுப்பினர்கள் வாக்களித்தனர்.

அதேவேளை, துணை மேயருக்கான வாக்கெடுப்பில் தமிழரசுக் கட்சியின் உறுப்பினர் இம்மானுவேல் தயாளன் 19 வாக்குகளைப் பெற்று வெற்றியடைந்தார்.

மேயர், துணை மேயர் தெரிவுகளுக்கான பகிரங்க வாக்கெடுப்பில் தேசிய மக்கள் சக்தியினர் நடுநிலை வகித்தமை குறிப்பிடத்தக்கது.



## அனைவருக்கும்...

கைப்பற்ற ஒத்துழைத்த எமது கட்சியின் உறுப்பினர்கள் மற்றும் ஏனைய கட்சிகளின் உறுப்பினர்களுக்கு நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்."

- இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் இன்று தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மாநகர சபை மேயர் தெரிவின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"யாழ்ப்பாணம் மாநகர சபையில் அதிக ஆசனங்களைத் தமிழரசுக் கட்சியே பெற்றுக்கொண்டது. இதனடிப்படையில் மேயர் மற்றும் துணை மேயரை நிறுத்தி வெற்றியையும் பெற்றுள்ளோம். .

இதற்கு ஒத்துழைத்த எமது கட்சியின் உறுப்பினர்கள் மற்றும் ஏனைய கட்சிகளின் உறுப்பினர்களுக்கும் நாம் இந்த நேரத்தில் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இந்த உள்ளூராட்சி சபைகளில் எந்தத் தரப்பினர் அதிகூடிய ஆசனங்களைப் பெற்றிருக்கின்றார்களோ அவர்களே ஆட்சி அமைக்க வேண்டும் என்று ஆரம்பத்திலேயே நாங்கள் கூறியிருந்தோம்.

அந்தக் கோட்பாட்டுக்கு அமைவாக யாழ். மாநகரத்தில் நாங்கள் செயற்பட்டிருக்கின்றோம். இந்தக் கோட்பாட்டுக்கு வேறு சில கட்சிகளும் இணங்கியிருந்தன. எங்களோடு நடைபெற்ற பேச்சு வார்த்தைகளிலும் அவர்கள் அதனைத் தெரிவித்திருந்தனர். ஆனால், அந்தக் கோட்பாட்டை அவர்கள் தற்போது மீறியுள்ளனர்." - என்றார்.




# மண்முனை தென்மேற்கு பிரதேச சபை ஆட்சி சுயேச்சைக் குழு - பிள்ளையான் அணி வசம்!

## தவிசாளராக திரேசகுமாரன் தெரிவு

(வி.ரி. சகாதேவராஜா)

மண்முனை தென்மேற்கு பிரதேச சபையில் பந்து சின்ன சுயேச்சைக் குழுவும் கிழக்குத் தமிழர் கூட்டமைப்பும் இணைந்து ஆட்சியைக் கைப்பற்றியுள்ளன.

மண்முனை தென்மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் தெரிவுக் கூட்டம் இன்று கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி தலைமையில் நடைபெற்றது .

அங்கு தவிசாளர் தெரிவில் இருவர் போட்டியிட்டார்கள். சுயேச்சை பந்து அணியில் இளையதம்பி திரேசகுமாரன், இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் கோபாலபிள்ளை சுரேந்திரன் ஆகியோர் போட்டியிட்டார்கள் .

அதன்போது 9 வாக்குகளைப் பெற்ற சுயேச்சை அணி சார்பில் போட்டியிட்ட திரேசகுமாரன் தவிசாளராகத் தெரிவானார். மற்றவருக்கு ஆறு வாக்குகள் கிடைக்கப் பெற்றன.

உப தவிசாளராகக் கிழக்குத் தமிழர் கூட்டமைப்பு படகு கட்சியின் உறுப்பினர் கனகநாயகம் கபில்ராஜ் ஏகமனதாகத் தெரிவானார்.

மொத்தத்தில் அங்கு சுயேச்சை அணியும் கிழக்குத் தமிழர் கூட்டமைப்பு படகு அணியும் சேர்ந்து ஆட்சி அமைத்தமை குறிப்பிடத்தக்கது.

தேசிய மக்கள் சக்தி நடுநிலையாக இருந்தது.

கடந்த தடவை ஆட்சியில் இருந்த இலங்கைத் தமிழரசுக் கட்சி இம்முறை தோல்வியைத் தழுவியது.













# தெல். புற்றுநோய் சிகிச்சையைப் பிரிவின் குழப்பத்துக்கு எதிராக இன்று கவனவீர்ப்பு!

(எஸ்.நிதர்ஷன்)

தெல்லிப்பழை ஆதார வைத்திய சாலையின் புற்றுநோய் சிகிச்சையைப் பிரிவில் காணப்படும் குழப்பத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து இன்று தெல்லிப் பழை ஆதார வைத்தியசாலைக்கு முன் பாகக் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இது குறித்து தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையின் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் கருத்து தெரிவிக்கையில்,

இந்த மருத்துவமனையானது வடக்கு மாகாணத்தில் உள்ள விசேடமான ஒரே ஒரு புற்றுநோய் மருத்துவமனை ஆகும்.

வடக்கிலிருந்து தினமும் நூற்றுக் கணக்கான நோயாளிகள் இந்த மருத்துவ மனைக்கு வந்து சிகிச்சை பெறுகின்றனர்.

நிர்வாகத்தினரால் அடக்குமுறை, பழிவாங்கல் தெற்கில் இருந்து கூட பல நோயாளிகள் இந்த வைத்தியசாலைக்கு அன்றாடம் வந்து சிகிச்சை பெற்றுச் செல் கின்றனர். கடந்த காலத்தில் 11 சதவீதமான மக்கள் வெளி மாவட்டத்தில் இருந்து இங்கே வருகை தந்து சிகிச்சையை பெற்று சென்றனர்.

இதிலிருந்து நமது வைத்தியசாலை எவ்வாறுசிறப்பானசேவையைவழங்குகின்றது என்பது அனைவருக்கும் தெரியும். இதனை சிதைக்கும் செயற்பாடு கடந்த இரண்டு வருடங்களாக நடைபெற்று வருகின்றன.

தனிப்பட்ட இலாபத்தை கருத்தில் கொள்ளாத, தன்னலமற்ற மருத்துவர்கள், நிர்வாகத்தினரால் அடக்குமுறை, பழி வாங்கல் வாங்கல் மற்றும் பல்வேறு இன னல்களுக்கு உள்ளாகி வருகின்றனர்.

பொய்யான தகவல்களைச் சமூக ஊடகங்கள் மூலம் பரப்பிச் சிறந்த மருத்து வர்களைநாட்டைவிட்டுவெளியேற்றமுனை கின்றனர்.

இதனால் இனிமேல் மக்கள் தனியார் அல்லது மகரகம வைத்தியசாலைக்கு செல்ல வேண்டிய துர்ப்பாக்கி நிலை ஏற்பட்டுள்ளது.

இந்தப் போராட்டமானது தனி மனித னுக்கானது அல்ல ஏழை மக்களுக்கா னது. ஏழை மக்கள் இலவச சிகிச்ச பெறு கின்ற உரிமையை பாதுகாக்க வேண்டும்.

தரமான, இலவசமான சிகிச்சையை பெறுவதை மறுக்கும் சட்டவிரோத செயற் பாடுகளிலிருந்து பாதுகாத்து, நோயாளிக ளின் எதிர்காலத்துக்கு உறுதுணையாக இருக்க வேண்டும்.– என்றார்.

இதன்போது போராட்டக்காரர்கள் பதாகைகளை ஏந்தி, கோசமிட்டவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதில் நாடாளுமன்ற உறுப்பினர் கருணைநாதன் இளங்குமரன் வைத்தி யர்கள், சமூக மட்ட அமைப்பினர், பொது மக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

இதேவேளை போராட்டத்தின் இறுதி யில் தெல்லிப்பழை புற்றுநோய் வைத் தியசாலை தொடர்பில் ஜனாதிபதிக் கான மகஜரை தேசிய மக்கள் சக்தியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரனிடம் கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.










# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## விரைந்து நீதி செய்க!

நாட்டின் பொதுத்துறையில் நீடித்து, நிலைத்துப் புரையோடிப் போன ஊழல், மோசடிகள், முறைகேடுகள், தவறான நிர்வாகம் போன்றவை 2022 ஆம் ஆண்டு நாட்டை பேரழிவு தரும் பொருளாதார நெருக்கடி நிலைக்குக் கொண்டு சென்றன என்பது வெளிப்படையான உண்மை.

அந்த ஊழல், முறைகேடுகளால் அதிர்ச்சியுற்றுப் போன மக்கள், அதிலிருந்து மீளும் வழிவகைகளை முன்னெடுப்போம் என்று உறுதியளித்த ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்து அதன் எழுச்சிக்கு வழி செய்தனர்.

அரசாங்க நிர்வாக மட்டத்திலும், பொது துறைகளிலும் இடம்பெற்ற ஊழல்கள், முறைகேடுகள், தவறான கையாளுகைகள், நிர்வாகச் சீர்கேடுகள் போன்றவை தொடர்பில் தொடர்ந்தும் அதிர்ச்சியூட்டும் செய்திகள் வெளியாகி வருகின்றன.

ஜனாதிபதியால் வழங்கப்படும் பொது மன்னிப்பு திட்டத்தின் கீழேயே முறைகேடாக 60 கைதிகள் வரை அண்மைக்காலத்தில் பின்கதவால் விடுதலை செய்யப்பட்டு இருக்கிறார்கள் என்ற செய்தி இலங்கையில் நிர்வாக மட்டத்தில் ஊழலின் ஆதிக்கத்தை வெளிப்படுத்தி நிற்கின்றது.

தேசிய மக்கள் சக்தி அரசு பதவியேற்ற உடன் ஊழலுக்கு எதிராக அதிரடி நடவடிக்கைகளை எடுத்து, நாட்டின் நிர்வாக நெறிமுறைகளில் ஒரு பெரிய மாற்றத்தைக் கொண்டு வருவதாக உறுதி அளித்த போதிலும் அது நடைமுறைக்கு வந்ததாகத் தெரியவில்லை.

ஊழலுக்கு எதிராக போராடுவதற்கு பொதுக்கூட்டங்களில் முழங்கப்படும் வெறும் வாய்ச்சவடால் பேச்சுக்களும், ஆக்ரோஷ சபதங்களும் போதுமானவை அல்ல. காத்திரமான நடவடிக்கைகளும் இறுக்கமான சட்ட, நீதித்துறை செயற்பாடுகளுமே முக்கியமானவை.

இலங்கையின் நீதித்துறை காலத்தை இழுத்தடித்து, விவகாரத்தை நீர்த்துப் போக வைப்பதில் தனித்துவமிக்கது என்பது எல்லோருக்கும் தெரிந்த விடயம்.

நாட்டை ஊழல், முறைகேடுகள், சீரழிவுகளில் இருந்து மீட்பதாயின் சட்டம், ஒழுங்கு, நீதி முறைகள் உரிய வழிமுறைகளின் அடிப்படையில் பின்பற்றப்பட வேண்டும்.

தாமதித்த நீதி மறுக்கப்பட்ட நீதியாகிவிடுகின்றது என்பதை இப்பத்தியில் பல தடவைகள் சுட்டிக்காட்டியாகிவிட்டது.

ஊழல், மோசடியில் இருந்து நாட்டை மீட்டெடுப்பதற்கு முதலில் தாமதிக்காமல், விரைந்து, நீதியைத் நிலைநாட்டுகின்ற ஒரு விசேட நடைமுறை ஏற்பாடு அவசரமாக - அவசியமாக - தேவைப்படுகின்றது.

நாட்டின் மிக முக்கியமான இந்தச் செயற்பாட்டை முன்னெடுப்பதற்காக ஊழல், முறைகேடுகள், சீர்கேடுகள் தொடர்பான சட்ட விசாரணைகளை கால தாமதமின்றி விரைந்தும், அதேசமயம் சட்ட, நீதி முறைமைகளுக்கு அமைவாகவும் முன்னெடுக்கக் கூடியதான புதிய ஏற்பாடுகளை நடைமுறைக்குக் கொண்டு வருவது அத்தியாவசியமாகின்றது.

நாட்டின் தேவையையும், அவசரத்தையும், கட்டாயத்தையும் கருதி, காலத்துக்கு காலம் இத்தகைய கட்டமைப்புகள், முறைமைகள், நீதி பரிபாலன ஏற்பாடுகள் செய்யப்பட்டு வந்திருக்கின்றன.

இப்போதும் நாட்டை ஊழல், முறைகேடுகள், சீர்கேடுகளில் இருந்து மீட்டெடுப்பதற்காக - விரைந்து, தாமதிக்காமல் நீதியை நிலைநாட்டச் செய்வதற்காக விசேட நீதி பரிபாலன ஏற்பாடு ஒன்றை அரசு கவனத்தில் கொள்ள வேண்டும். இது காலத்தின் கட்டாயமாகும்.



# கொழும்பில் திடீரென எரிந்த ஓட்டோ

கொழும்பு மாநகர சபை அலுவலகத்திற்கு அருகில் வீதியில் பயணித்து கொண்டிருந்த ஓட்டோ ஒன்று திடீரென தீப்பற்றி எரிந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த தீ விபத்து இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

தீ விபத்தின் போது எவருக்கும் எந்த வித காயங்களும் ஏற்படவில்லை எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பு மாநகர சபையின் தீயணைப்பு படையிர் இணைந்து தீ பரவலை கட்டுத்தினர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

தீ விபத்திற்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

எவ்வாறிருப்பினும், ஓட்டோ முற்றாக தீயில் எரிந்து நாசமாகியுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.



# கிழக்கு செம்பியன்பற்று பகுதியில் இன்று மீனவர்களிடையே முறுகல்

யாழ். வடமராட்சி கிழக்கு செம்பியன்பற்று பகுதியில் இன்று மீனவர்களிடையே வன்முறை வெடித்துள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது:-

வடமராட்சி கிழக்கு செம்பியன்பற்று பகுதியில் டிராக்டர் இயந்திரம் பாவித்து கரைவலை தொழில் செய்வதற்கு தடை விதிக்கப்பட்டது. இதனை மீறி அங்கு சிலர் டிராக்டர் இயந்திரத்தை பயன்படுத்தி கரைவலை தொழில் செய்து வந்தனர்.

இந்நிலையில், இன்று நண்பகல் 12 மணியளவில் செம்பியன்பற்று சென் பிலிப் நேரியார் கடற்றொழிலாளர் சங்க உறுப்பினர்கள் என தம்மை அடையாளப்படுத்திக்கொண்டு மதுபோதையில் தடிகளுடன் கரைவலை வாடிகளுக்குச் சென்ற கும்பலொன்று அங்கிருந்த மீனவர்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளது.

இந்த தாக்குதல் சம்பவத்தில் காயமடைந்த மீனவர் ஒருவர் மருதங்கேணி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, பின்பு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இந்த வன்முறைச் சம்பவம் தொடர்பாக மருதங்கேணி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.





# சுழிபுரம் இறங்குதுறையில் அகழ்ந்த மண்ணை இராணுவத்துக்குக் கொடுத்ததாகக் குற்றச்சாட்டு!

## வலிகாமம் அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் சுட்டிக்காட்டு

சுழிபுரம் இறங்குதுறையில் இருந்து எடுத்த மண்ணை மக்களின் பாவனையில் உள்ள வீதிகளுக்கு கொடுக்காமல் இராணுவத்தினருக்கு கொடுத்ததாக சுழிபுரம் பொதுமகன் ஒருவர் குற்றம் சாட்டியுள்ளார்.

வலிகாமம் மேற்கு பிரதேச செயலகத்தின் அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு கூட்டம் இன்று பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றபொதே இந்த குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில்,

சுழிபுரம் கடல் இறங்குதுறையானது அண்மையில் ஆழப்படுத்தப்பட்டது.

இதன் போது அங்கு பெறப்பட்ட மண்ணை எமது பகுதிகளில் உள்ள வீதிகளுக்கு போட்டு வெள்ளம் தேங்காமல் செய்வதற்கு அனுமதி கோரினோம். இருந்தாலும் எமக்கு அனுமதி வழங்கப்படவில்லை.

ஆனால் கரையோர பகுதி இராணுவத்துக்கு அதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

எங்களது பகுதிகளில் உள்ள எத்தனையோ வீதிகள் வெள்ளத்தில் மூழ்குகின்றன. பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் கூட எத்தனை தடவை வெள்ளத்துக்குள் வந்து பார்வையிட்டுள்ளார்.

இவ்வாறான சந்தர்ப்பத்தில் தான் நாங்கள் அந்த மண்ணை எடுப்பதற்கு அனுமதி கோரி இருந்தோம். குறைந்தது 13 அல்லது 14 வீதிகள் இவ்வாறு காணப்படுகின்றன.

எமது மக்களின் பாவனைக்கு அந்த மண்ணை அதிகாரிகள் வழங்காமைக்கான காரணம் என்ன என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.



# ஆனையிறவு உப்பு என்று பெயர் மீண்டும் வந்தது!

ஆனையிறவு உப்பளத்தில் உற்பத்தி செய்யப்படும் உப்புக்கு ஆனையிறவு உப்பு என்று மீண்டும் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

குறித்த உப்பளத்தில் உற்பத்தி செய்யப்படும் உப்புக்கு அண்மையில் ரஜ உப்பு என்று பெயர் சூட்டியமை தமிழ் மக்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியது.

இந்த நிலையில் மீண்டும் அந்த உப்புக்கு ஆனையிறவு உப்பு என்ற பெயரே சூட்டப்பட்டுள்ளது.

அத்துடன் குறித்த உப்பளத்தில் உற்பத்தி செய்யப்படும் உப்பானது வடக்கு மாகாணத்தில் முதல்கட்டமாக விநியோகம் செய்யப்படும் என்று அறியமுடிகிறது.

இதேவேளை, வடபகுதியில் அமைந்துள்ள ஆனையிறவு உப்பளமானது தேசிய மக்கள் சக்தி அரசால் அண்மையில் உத்தியோக பூர்வமாக திறந்து வைக்கப்பட்டபோது ரஜ உப்பு என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

இந்தச் செயற்பாட்டுக்குப் பல்வேறு தரப்பினரும் தமது எதிர்ப்பை வெளியிட்ட நிலையில் போராட்டங்களும் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.






# சடலம் நல்லடக்கத்தில் குழப்பம் விளைவித்த பிக்குவால் பதற்றம்!

திருகோணமலையில் சடலம் நல்லடக்கம் செய்வதற்குப் பௌத்த பிக்கு தடை விதித்ததால் அந்தப் பகுதியில் பதற்றமான நிலை தோன்றியுள்ளது.

சம்பவம் திருகோணமலை குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட புல்மோட்டை 02 - பொன்மலைக்குடா பகுதியில் இன்று (13) இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில்இ புல்மோட்டையில ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த நிலையில்இ குறித்த சடலத்தை நல்லடக்கம் செய்வதற்கு மயானத்துக்காக ஒதுக்கப்பட்டுள்ள காணியில் நல்லடக்கம் இடம்பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன் பின்னர் சடலம் அடக்கத்துக்கு எதிராக புல்மோட்டை அரிசிமலை விகாரையின் விகாராதிபதியா ல் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்று மேற்கொண்டுள்ளது.

அதன் அடிப்படையில் குறித்த நல்லடக்கத்தை நிறுத்தக்கோரி புல்மோட்டை பொலிஸ் நிலைய அதிகாரிகள் வேண்டுகோள் விடுத்துள்ள நிலையில் குழப்ப நிலை ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திராவின் கவனத்துக்கு குறித்த விடயம் கொண்டு செல்லப்பட்டதையடுத்து அவ்விடத்துக்கு வந்த பிரதேச செயலாளரின் தடையீட்டை அடுத்து நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளது.

கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் 12 ஆம் திகதியும் குறித்த பகுதியில் சடலம் நல்லடக்கம் செய்யக் குழி தோண்டப்பட்ட போது புல்மோட்டை அரிசிமலை விகாரையின் விகாராதிபதி குறித்த காணி “பூஜா பூமி” என புல்மோட்டை பொலிஸார் சிலரை அப்பகுதிக்கு அனுப்பி நல்லடக்கத்தை தடை செய்திருந்தார்.

இதனையடுத்து அப்பகுதியில் பதற்றமான சூழல் தோன்றிய நிலையில் குறித்த விடயம் பிரதேச செயலாளர் உட்பட பலருடைய கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டு பின்னர் நல்லடக்கம் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# வவுனியா - மன்னார் வீதியில் இரு மோட்டார் சைக்கிள்கள் விபத்து

வவுனியா – மன்னார் வீதியில் இரு மோட்டார் சைக்கிள்கள் காமினி மகா வித்தியாலயம் முன்பாக விபத்துக் குள்ளானது.

விபத்தில் வவுனியா குருமன்காடு பகுதியில் இருந்து கண்டி வீதி நோக்கி சென்ற மோட்டார் சைக்கிள் காமினி மகாவித்தியாலயம் முன்பாக பூங்கா வீதியில் திரும்ப முற்பட்டவேளை குறித்த மோட்டார் சைக்கிளின் பின்னால் வேகமாக வந்த மற்றுமொரு மோட்டார் சைக்கிள் மோதி விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த பெண் உட்பட மூவர் படுகாயமடைந்து வவுனியா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.








# வடக்கு மாகாணத்தின் சுகாதார சேவைகள் தொடர்பாக ஆராய்வு

## சுகாதார சேவைகள் பணிப்பாளர் - ஆளுநர் சந்திப்பு

வடக்கு மாகாணத்தின் சுகாதார சேவைகள் தொடர்பான பல்வேறு விடயங்கள் தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனுக்கும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் அசேல குணவர்தனவுக்கும் இடையிலான சந்திப்பு ஆளுநர் செயல–கத்தில் நேற்று வியாழக்கிழமை (12) நடைபெற்றது.

தெல்லிப்பழை ஆதார மருத்துவ மனையில் எழுந்துள்ள சர்ச்சைகள் தொடர்பில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பாக ஆளுநர், சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு தெரியப்படுத்தினார்.

இதனுடன் தொடர்புடைய தரப்புக்களுடன் கலந்துரையாடவுள்ளார் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆளுநரிடம் குறிப்பிட்டார்.

மேலும்இ வடக்கு மாகாணத்துக்கு தாதியர்கள் நியமிக்கப்பட்ட போதும் அதேயளவு எண்ணிக்கையான தாதியர்கள் இங்கிருந்து சென்றுள்ளனர் என்று சுட்டிக்காட்டிய ஆளுநர் பல மருத்துவமனைகளில் இன்னமும் தாதியர் வெற்றிடங்கள் காணப்படுகின்றன எனக் குறிப்பிட்டார். அவற்றை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் கோரினார்.

இன்னும் இரண்டு அல்லது மூன்று மாதங்களில் மேலும் நூற்றுக் கணக்கான தாதியர்களுக்கு நியமனம் வழங்கவுள்ளதாகவும் அதன்போது இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுப்பார் என்றும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் குறிப்பிட்டார்.

இவற்றுக்கு மேலதிகமாக நெதர்லாந்து அரசின் உதவியுடன் வடக்கில் அமைக்கப்பட்ட 4 விசேட மருத்துவ அலகுகளையும் இயக்குவதற்கான ஆளணி தொடர்பில் ஆளுநர் சுட்டிக்காட்டினார்.

குறிப்பாக மாங்குளம் மருத்துவ மனை தவிர்ந்த ஏனைய 3 மருத்துவ மனைகளுக்கும் ஆளணி இன்னனும் அனுமதிக்கப்படவில்லை என ஆளுநர் குறிப்பிட்டார். முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் ஆளணி மீளாய்வுக்கான அனுமதிகள் இன்னமும் கிடைக்கவில்லை எனவும் அதனைப் பெற்றுக் கொள்வதற்கான முயற்சிகளில் தொடர்ந்து ஈடுபட்டு வருவதாகவும் குறிப்பிட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் எவ்வளவு விரைவாக அதனைப் பெற்றுத் தரமுடியுமோ அதனைச் செய்வதாக ஆளுநருக்கு பதிலளித்தார்.

முல்லைத்தீவு மாவட்ட மருத்துவ மனையின் தேவைப்பாடுகள் தொடர்பாகவும் ஆளுநர் இதன்போது குறிப்பிட்டார். வடக்கின் சில மாவட்டங்களில் நிலவும் சுகாதாரத்துறை தொடர்பான நிர்வாகப் பிரச்சினைகள் பற்றியும் ஆளுநரும் சுகாதார சேவைகள் பணிப்பாளரும் கலந்துரையாடினர்.

இந்தச் சந்திப்பில் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் சமன் பத்திரனவும் இணைந்து கொண்டார்.











# வடக்கில் கூட்டுறவு உற்பத்தியை வளப்படுத்தல் தொடர்பில் ஆராய்வு

வடக்கு மாகாணத்தில் நிலைத்து நிற்கக் கூடிய கூட்டுறவு அபிவிருத்திக்காக உற்பத்தி கூட்டுறவை வளப்படுத்தும் – உருவாக்கும் நோக்கிலான கலந்துரையாடல் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனுக்கும் கூட்டுறவு அபிவிருத்தி பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க, ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் சாந்த ஜயரட்ன ஆகியோருக்கும் இடையில் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது.

வடக்கு மாகாண மகளிர் விவகாரம், புனர்வாழ்வளித்தல், சமூக சேவைகள், கூட்டுறவு, உணவு வழங்கலும் விநியோகமும் மற்றும் தொழிற்துறையும் தொழில் முனைவோர் மேம்பாடும் மற்றும் வர்த்தக வாணிப அமைச்சின் செயலாளர் பொ.வாகீசனின் வரவேற்புரையுடன் கலந்துரையாடல் ஆரம்பமானது.

ஆரம்பத்தில் உரையாற்றிய ஆளுநர்,

இலங்கையிலேயேவடக்குமாகாணத்தின் கூட்டுறவுத் துறைதான் 1970 –1980 ஆம் ஆண்டுகளில் கோலோச்சியது. காலப்போக்கில் போர் உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் பின்னடைவைச் சந்தித்தது. இன்று கூட்டுறவுத் துறை இயலுமை குறைந்துள்ளதாக மாறியுள்ளது.

அன்றைய காலத்தில் வடக்கில் இருந்து விவசாய உற்பத்திப் பொருள்களை தென்னிலங்கை எடுத்துச் சென்று அங்கிருந்து இங்குள்ள மக்களுக்கான நுகர்வுப் பொருள்களை எடுத்து வந்து கூட்டுறவுச் சங்கங்கள் விற்பனை செய்தன. ஆனால் இன்று தனியாருடன் கூட்டுறவுத்துறை போட்டியிட முடியாத நிலைமை உள்ளது.

காலத்துக்கு ஏற்றவகையில் உத்திகளைப் பின்பற்றினால் மாத்திரமே கூட்டுறவுத்துறையால் மீண்டெழ முடியும் என்றார்.

இதன் பின்னர் கூட்டுறவு அபிவிருத்தி பிரதி அமைச்சர் தனது உரையில்,

எமது அரசு கூட்டுறவுத் துறையை வலுப்படுத்துவதற்கு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. வடக்கில் மாத்திரமல்ல தெற்கிலும் கூட்டுறவுத்துறை பின்னடைவைச் சந்தித்துத்தான் உள்ளது. தற்போது எரிபொருள் நிரப்பு நிலையங்கள் ஊடான வியாபாரம் மற்றும் கிராமிய வங்கிகள் ஊடான கடன் வழங்கல் என கூட்டுறவின் செயற்பாடுகள் சுருங்கி விட்டன. கூட்டுறவு பின்தங்கிய மக்களின் அனைத்துத் தேவைகளையும் நிறைவேற்றும் ஒன்றாக மாற வேண்டும்.

கடந்த காலங்களில் கூட்டுறவுத் துறையை அரசியல்வாதிகள் கையாண்டிருந்தனர். கூட்டுறவுத்துறையின் சொத்துக்கள், இயக்குநர் சபைகளில் இருப்பவர்களால் தனிப்பட்ட தேவைகளுக்கு பயன்படுத்தப்பட்டிருந்தன. கணக்காய்வும் உரிய காலத்தில் நடத்தப்பட்டிருக்கவில்லை. இவை எல்லாம் பின்னடைவுக்குக் காரணமாகியுள்ளன. அத்துடன் கூட்டுறவு துணை விதிகளில் தற்போதைய காலத்துக்கு ஏற்ப மாற்றங்களும் செய்யப்பட வேண்டும் என்றார் பிரதி அமைச்சர்.

தொடர்ந்து ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் சாந்த ஜயரட்ன, நிலைத்து நிற்கக் கூடிய கூட்டுறவு அபிவிருத்திக்காக உற்பத்தி கூட்டுறவை வளப்படுத்தும் – உருவாக்கும் செயற்றிட்டம் தொடர்பில் விளக்கமளித்தார். உற்பத்திக் கூட்டுறவுக்கான காப்புறுதி தொடர்பில் பணிப்பாளரால் தெளிவுபடுத்தல் வழங்கப்பட்டது. இறுதியாக தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகத்தின் செயற்பாடுகள் தொடர்பில் அதன் பணிப்பாளரால் தெரியப்படுத்தப்பட்டது.

இதனைத் தொடர்ந்து கூட்டுறவுச் சங்கங்களின் பிரதிநிதிகளால் சில பிரச்சினைகள் சுட்டிக்காட்டப்பட்டன. அது தொடர்பில் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் மற்றும் பிரதி அமைச்சரால் தெளிவுபடுத்தல்களும் வழங்கப்பட்டன.

இந்தக் கலந்துரையாடலில் வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர், ஒவ்வொரு மாவட்டங்களதும் கூட்டுறவு உதவி ஆணையாளர்கள், கூட்டுறவுச் சங்கங்கள், சமாசங்களின் பிரதிநிதிகளும் பங்கேற்றனர்.







# விமான விபத்தில் மருத்துவ மாணவர்கள் 10 பேர் உட்பட 251 உயிரிழப்புகள் பதிவு

## ஒரே ஒரு பயணி உயிர் பிழைத்த அதிசயம்

குஜராத்தின் அகமதாபாத்தில் இருந்து 242 பேருடன் லண்டன் செல்லும் ஏர் இந்தியா விமானம், புறப்பட்ட சில நிமிடங்களில் கீழே விழுந்து நொருங்கி தீப்பிடித்தது. இந்த பயங்கர விபத்தில் குஜராத் முன்னாள் முதல்வர் விஜய் ரூபானி உட்பட விமானத்தில் சென்ற 241 பேர் உயிரிழந்தனர். தரையில் விழுந்த விமானம், மருத்துவ கல்லூரி விடுதியில் மோதியதில், மருத்துவ மாணவர்கள் 10 பேரும் இந்த விபத்தில் பரிதாபமாக உயிரிழந்தனர்.

குஜராத் மாநிலம் அகமதாபாத்தில் உள்ள சர்தார் வல்லபபாய் படேல் சர்வதேச விமான நிலையத்தில் இருந்து நேற்று பிற்பகல் 1.38 மணிக்கு ஏர் இந்தியா நிறுவனத்தின் பயணிகள் விமானம் லண்டனுக்கு புறப்பட்டது. இதில் 2 விமானிகள், 10 விமான ஊழியர்கள், 230 பயணிகள் என 242 பேர் பயணம் செய்தனர்.

இந்நிலையில், புறப்பட்ட 2 நிமிடங்களில் அகமதாபாத் மெஹானி நகர் குடியிருப்பு பகுதியில் விமானம் விழுந்து நொறுங்கி தீப்பிடித்தது. இதில், விமானத்தில் பயணம் செய்த 241 பேர் உடல் கருகி உயிரிழந்தனர். விமான பயணிகளில் 169 பேர் இந்தியர்கள். பிரிட்டனை சேர்ந்த 53 பேர், போர்ச்சுகல் நாட்டை சேர்ந்த 7 பேர், கனடாவை சேர்ந்த ஒருவரும் விமானத்தில் இருந்தனர். விமான ஊழியர்கள், பயணிகள் என மொத்தம் உள்ள 242 பேரில், 128 பேர் ஆண்கள், 100 பேர்பெண்கள், 14 பேர் குழந்தைகள் என தெரியவந்தது. குஜராத் முன்னாள் முதல்வர் விஜய் ரூபானியும் விமானத்தில் பயணம் செய்துள்ளார். விபத்தில் அவரும் உயிரிழந்துள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே, விமானம் விழுந்து நொறுங்கிய குடியிருப்பு பகுதியில் அரசு மருத்துவ கல்லூரி மாணவர் விடுதி உள்ளது. இங்கு ஏராளமான மருத்துவ மாணவர்கள் மதிய உணவு சாப்பிட்டுக் கொண்டிருந்த நேரத்தில், விடுதியின் 4 மாடி கட்டிடம் மீது விமானம் மோதியதில், அந்த கட்டிடம் உடைந்து நொறுங்கியது. இதில், இளநிலை, முதுநிலை மருத்துவ மாணவர்கள் 10 பேர் உயிரிழந்தனர். 50 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் படுகாயம் அடைந்தனர். இதில் 25 பேர் தீவிர சிகிச்சை பிரிவில் உள்ளனர்.

விபத்து குறித்து அகமதாபாத் விமான நிலைய வட்டாரங்கள் குறிப்பிடுகையில்,



விமான நிலையத்தின் ஓடுபாதையில் ஏர் இந்தியா விமானம் சரியான வேகத்தில்தான் இயக்கப்பட்டுள்ளது. ஆனால், தரையைவிட்டு பறக்க தொடங்கிய பிறகு,போதுமான உயரத்துக்கு மேலே எழும்பவில்லை. அடுத்த 2 நிமிடங்களில் விமானம் கீழே விழுந்து நொறுங்கியுள்ளது. கீழே விழுந்த வேகத்தில் பயங்கரமாக தீப்பிடித்து எரிந்தது.லேண்டிங் கியர் கோளாறு காரணமாக விமான சக்கரம் ஏதாவது கட்டிடம் மீது மோதியிருக்கலாம். விமான இன்ஜினில் பறவைகள் மோதியிருக்கலாம். விமான இன்ஜினில் திடீரென கோளாறு ஏற்பட்டிருக்கலாம். இதுபோன்ற காரணங்களால் விபத்து நேரிட்டிருக்க வாய்ப்பு உள்ளது. விமானத்தின் கறுப்பு பெட்டி மீட்கப்பட்டுள்ளது. அதை ஆய்வு செய்ய வேண்டும். விபத்து குறித்து முழுமையாக விசாரணை நடத்த வேண்டும். அதன் பிறகே, விபத்துக்கான உண்மையான காரணம் தெரியவரும். இவ்வாறு அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

அகமதாபாத் பொலிஸார் குறிப்பிடுகையில்,

“லண்டன் செல்லும் விமானம் என்பதால் எரிபொருள் முழுமையாக நிரப்பப்பட்டு இருந்தது. சுமார் 1.25 லட்சம் லிட்டர் பெட்ரோல் நிரப்பப்பட்டதாக கூறப்படுகிறது. விமானம் புறப்பட்ட 2 நிமிடங்களில், அருகே உள்ள மருத்துவ கல்லூரி விடுதி மீது மோதியுள்ளது. இதில், விமானம் வெடித்து சிதறி, சுற்றுவட்டார பகுதி முழுவதும் தீப்பிடித்து எரிந்தது. உடனடியாக 40 தீயணைப்பு வாகனங்களில் வீரர்கள் விரைந்து வந்து தீயணைக்கும் பணியில் ஈடுபட்டனர். பல மணி நேரம் தீவிரமாக போராடி தீ அணைக்கப்பட்டது. உடல்கள் மிகவும் கருகிய நிலையில் உள்ளதால் அடையாளம் காண முடியவில்லை. ஏராளமான பயணிகளின் தலை, உடல் பாகங்கள் தனித்தனியாக மீட்கப்பட்டுள்ளன. டி.என்.ஏ. சோதனைக்கு பிறகு, குடும்பத்தினரிடம் உடல்கள் ஒப்படைக்கப்படும்.

உயிரிழந்தவர்களின் உறவினர்கள் தொடர்பு கொள்ள, குஜராத் அரசு சார்பில் சிறப்பு கட்டுப்பாட்டு அறை திறக்கப்பட்டுள்ளது. 9978405304, 079 23251900 ஆகிய உதவி எண்கள் வெளியிடப்பட்டுள்ளன.” என்றனர்.

விமான விபத்தில் விஷ்வாஸ் குமார் ரமேஷ் (வயது 40) என்றபயணி அதிர்ஷ்டவசமாக உயிர் பிழைத்துள்ளார். சற்று பதற்றமான நிலையில் இருந்தாலும், மிக சாதாரண விபத்தில் சிக்கியவரை போல வெகு இயல்பாக அவர் நடந்து சென்றார். காலில் லேசாக அடிபட்டிருந்ததால், சற்று தாங்கியபடி சென்றார். அவர் நடந்து செல்லும் காட்சி, வலைதளங்களில் வைரலாக பரவி வருகிறது.

அவர் கூறியபோது, “கண்மூடி திறப்பதற்குள் எல்லாம் முடிந்து விட்டது. எப்படி உயிர் பிழைத்தேன் என்பது தெரியவில்லை. மீட்பு படை வீரர்கள் என்னை மீட்டு மருத்துவமனையில் சேர்த்தனர்” என்றார்.

இவர், டையூ பகுதியை பூர்வீகமாக கொண்டவர். 20 ஆண்டுகளாக குடும்பத்துடன் லண்டனில் வசிக்கிறார். அந்நாட்டு குடியுரிமை பெற்றுள்ளார். விமானத்தின் 11ஏ இருக்கையில் பயணம் செய்துள்ளார். அதே விமானத்தில் பயணம் செய்த அவரது அண்ணன் அஜய் குமார் விபத்தில் உயிரிழந்துவிட்டார். அவரது உடலை அடையாளம் காண முடியவில்லை என்று உறவினர்கள் தெரிவித்தனர்.

விபத்துக்குள்ளான விமானத்தின் கறுப்பு பெட்டி மீட்கப்பட்டுள்ள நிலையில், ஆய்வகத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது. இதை ஆய்வு செய்து, அதில் பதிவான தகவல்களை பெற 15 நாள்கள் வரை ஆகும். இதன்பிறகே, விபத்துக்கான உண்மையான காரணம் தெரியும் என்று விமான போக்குவரத்து துறை அதிகாரிகள் கூறினர். ‘இந்திய அதிகாரிகள் கேட்டுக் கொண்டால், விபத்து குறித்த விசாரணைக்கு உதவ அமெரிக்கா தயாராக இருக்கிறது’ என்று அமெரிக்க விமான போக்குவரத்து துறை தெரிவித்துள்ளது.

# இரு பிரிவினர் இடையில் வன்முறை: மேற்கு வங்க மாநிலத்தில் 40 பேர் கைது

மேற்கு வங்கத்தில் இரு குழுக்கள் இடையிலான மோதல் மற்றும் வன்முறை தொடர்பாக 40 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். மேற்கு வங்கத்தின் தெற்கு 24 பர்கானாஸ் மாவட்டம் மகேஷ்தலா என்ற கிராமத்தில் ஆக்கிரமிக்கப்பட்ட அரசு நிலத்தில் கடை கட்டுவது தொடர்பாக இரு குழுக்கள் இடையே நேற்று முன்தினம் மோதல் ஏற்பட்டது. இது வன்முறையாக மாறியது. இதில் பல வாகனங்கள் சேதம் அடைந்தன.

வன்முறையில் 5 பேர் காயம் அடைந்தனர். மேலும் வன்முறையை கட்டுப்படுத்த முயன்ற பொலிஸார் சிலரும் காயம் அடைந்தனர். அப்பகுதியில் அமைதியை பராமரிக்க பிஎன்எஸ்எஸ் சட்டப் பிரிவு 163 இன் கீழ் தடை உத்தரவு பிறப்பட்டுள்ளது.

இந்நிலையில் வன்முறை தொடர்பாக ரவீந்திரநகர் பொலிஸார் 7 வழக்குகள் பதிவு செய்து, இதுவரை 40 பேரை கைது செய்துள்ளனர். அப்பகுதியில் தற்போது நிலைமை கட்டுக்குள் இருப்பதாக பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்தனர். மேலும் தடை உத்தரவு அமலில் இருக்கும் வரை அரசியல் கட்சியினர் அங்கு செல்ல வேண்டாம் என கேட்டுக்கொண்டனர்.



இதற்கிடையில் மேற்கு வங்க சட்டப்பேரவையில் நேற்று முர்ஷிதாபாத் மற்றும் மகேஷ்தலா வன்முறை தொடர்பாக பா.ஜ.க. உறுப்பினர்கள் ஒத்திவைப்பு தீர்மானம் கொண்டு வந்தனர்.

எதிர்க்கட்சி தலைவர் சுவேந்து அதிகாரி, முர்ஷிதாபாத் வன்முறை தொடர்பாகவும் மற்றொரு பா.ஜ.க. எம்.எல்.ஏ. புனா பெங்ரா, மகேஷ்தலா வன்முறை தொடர்பாகவும் ஒத்தி வைத்து தீர்மானம் கொண்டுவந்தனர். ஆனால் இவற்றுக்கு சபாநாயகர் பிமன் பானர்ஜி அனுமதி மறுத்தார். இதற்கு பா.ஜ.க. உறுப்பினர்கள் எதிர்ப்பு தெரிவித்து, மம்தா அரசுக்கு எதிராக முழக்கமிட்டனர். பிறகு அவையில் இருந்து வெளிநடப்பு செய்த அவர்கள் ஆளுநர் மாளிகை நோக்கி ஊர்வலமாக சென்றனர்.

பா.ஜ.க. உறுப்பினர்களின் நடத்தையை அமைச்சர்கள் சந்திரிமா பட்டாச்சார்யா, சஷி பஞ்சா ஆகியோர் கண்டித்தனர். காவி கொடிகளை அசைப்பதும், இந்து விரோத அரசு என்று முழக்கமிடுவதும் முறையற்றது, சட்டப்பேரவை மாண்புக்கு எதிரானது என்று அமைச்சர்கள் தெரிவித்துள்ளனர்.

# பிரான்ஸ் ஜனாதிபதியுடன் எஸ். ஜெய்சங்கர் சந்திப்பு

பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மேக்ரானை இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் நேற்று சந்தித்துப் பேசினார். தீவிரவாதத்துக்கு எதிரான இந்தியாவின் போரில் பிரான்ஸ் ஆதரவு தெரிவித்ததற்கு நன்றி கூறினார்.

வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் பெல்ஜியம், பிரான்ஸ் ஆகிய நாடுகளுக்கு ஒருவார கால பயணமாக கடந்த ஞாயிற்றுக்கிழமை டில்லியில் இருந்து புறப்பட்டார். பஹல்காம் தீவிரவாத தாக்குலுக்கு பதிலடியாக ஒபரேஷன் சிந்தூர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு ஒரு வாரம் கடந்திருந்த சூழலில் அவர் ஐரோப்பிய நாடுகளுக்கு பயணம் மேற்கொண்டார்.

பயணத்தின் முதல் கட்டமாக பெல்ஜியம் நாட்டின் பிரசல்ஸ் சென்றடைந்த அவர் அந்நாட்டு தலைவர்களை சந்தித்து பேசினார். இதையடுத்து பிரசல்ஸை தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் ஐரோப்பிய யூனியனின் தலைவர்களை அவர் நேற்று முன்தினம் சந்தித்தார். அப்போது இந்தியா - ஐரோப்பிய யூனியன் இடையிலான உறவுகளை வலுப்படுத்துவது குறித்து விவாதித்தார்.



இதையடுத்து பிரான்ஸுக்கு நேற்று பயணத்தை தொடங்கிய எஸ். ஜெய்சங்கர், அந்நாட்டு ஜனாதிபதி இம்மானுவேல் மேக்ரானை சந்தித்தார்.

இந்த சந்திப்பு குறித்து எக்ஸ் தளத்தில் ஜெய்சங்கர் வெளியிட்ட பதிவில்,

"பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மேக்ரானை சந்தித்ததில் பெருமை அடைகிறேன். பிரதமர் மோடியின் வாழ்த்துகளை அவரிடம் தெரிவித்தேன். தீவிரவாதத்திற்கு எதிரான போரில் இந்தியாவுக்கு ஆதரவான வலுவான செய்திக்கு நன்றி தெரிவித்தேன். எங்களது நெருங்கிய நட்புறவின் நோக்கம் மற்றும் நம்பிக்கையை எங்கள் விவாதங்கள் பிரதிபலித்தன." என்று குறிப்பிட்டுள்ளார்.

# கொரோனா தொற்று காரணமாக இந்தியாவில் 77 பேர் உயிரிழப்பு

இந்தியாவில் கொரோனா தொற்றினால் இதுவரையில் 77 பேர் உயிரிழந்துள்ளனர்.

7,154 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்றுவருகின்றனர் என அந்த நாட்டு சுகாதார மற்றும் குடும்ப நல அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இதனிடையே, 8,000 இற்கும் அதிகமானோர் வைத்தியசாலைகளிலிருந்து வீடு திரும்பியுள்ளனர் என அந்த அமைச்சு கூறியுள்ளது. எனினும், 2,223 புதிய கொரோனா தொற்றாளர்கள் பதிவாகியுள்ளனர் என இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.









# விசேட அனுமதி வழங்கப்பட்ட 500,000 பேரை அமெரிக்காவிலிருந்து வெளியேறுமாறு அறிவிப்பு

அமெரிக்காவிற்குப் பிரவேசிப்பதற்கு விசேட அனுமதி வழங்கப்பட்ட 500,000 இற்கும் அதிகமானவர்களை நாட்டை விட்டு வெளியேறுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் உள்நாட்டுப் பாதுகாப்புத்துறை அறிக்கையொன்றை வெளியிட்டு இந்த அறிவிப்பை விடுத்துள்ளது.

முன்னதாக நாடு கடத்தலில் இருந்து தற்காலிகமாகப் பாதுகாக்கப்பட்ட கியூபா, ஹைட்டி, நிகரகுவா மற்றும் வெனிசுவெலா ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்களையே வெளியேறு மாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி நாட்டவர்களுக்கான வெளியேற்ற அறிவிப்பு மின்னஞ்சல் ஊடாக வழங்கப்பட்டுள்ளதாக அமெரிக்காவின் உள்நாட்டுப் பாதுகாப்புத்துறை தெரிவித்துள்ளது.

முன்னதாக அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி ஜோ பைடனின் உத்தரவுக்கு அமைய, மேற்படி நாட்டவர்கள் இரண்டு வருடங்களுக்கு அமெரிக்காவில் தங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# ஈரான் மீதான இஸ்ரேலின் தாக்குதலையடுத்து சந்தையில் மசகு எண்ணெய் விலை உயர்வு

ஈரான் மீதான இஸ்ரேலின் தாக்குதலால் உலக சந்தையில் மசகு எண்ணெய் விலை சடுதியாக உயர்ந்துள்ளது.

10 வீதம் வரை மசகு எண்ணெய்யின் விலை உயர்வடைந்துள்ளது.

இதன்படி, உலக சந்தையில் WTI ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 74.85 அமெரிக்க டொலராக அதிகரிப்பைப் பதிவு செய்துள்ளது.

அத்துடன் பிரெண்ட் ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 76.05 அமெரிக்க டொலராக அதிகரிப்பைப் பதிவு செய்துள்ளது.

இதேவேளை, உலக சந்தையில் இயற்கை எரிவாயுவின் விலை இன்றைய தினம் 3.59 அமெரிக்க டொலராக அதிகரிப்பைப் பதிவு செய்துள்ளது.






# ஈரான் மீது இஸ்ரேல் தொடர் வான்வழித் தாக்குதல்; பதில் தாக்குதல் அச்சத்தில் அவசர நிலை பிரகடனம்

ஈரான் மீது இஸ்ரேல் தொடர் வான்வழித் தாக்குதல்களை நடத்தியுள்ளது.

தெஹ்ரானின் அணுசக்தி திட்டத்தை அழிக்கும் முயற்சியில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாக சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

ஈரானுக்கு எதிரான தாக்குதலையடுத்து அறிக்கை ஒன்றை வெளியிட்ட இஸ்ரேல் பிரதமர் இஸ்ரேல் காட்ஸ், "ஈரானுக்கு எதிரான இஸ்ரேலின் தாக்குதலைத் தொடர்ந்து, இஸ்ரேல் மற்றும் அதன் குடிமக்கள்மீது ஏவுகணை மற்றும் ஆளில்லா விமானத் தாக்குதல்களை ஈரான் நடத்தலாம்." என கூறியுள்ளார்.

எனவே, இஸ்ரேல் காட்ஸ் நாடு முழுவதும் அவசரகால நிலையை அறிவித்துள்ளார்.

ஈரானிய அணுசக்தி நிலையங்கள், இராணுவ தலைமையகம், என்பவற்றைக் குறிவைத்து இஸ்ரேல் தாக்குதல்களை நடத்தியதைத் தொடர்ந்து இஸ்ரேல் தனது வான் வெளியை மூடியுள்ளது.

தெஹ்ரானின் சர்வதேச விமான நிலையத்திலிருந்து வெளியேறும் விமானங்களையும் ஈரான் நிறுத்தி விட்டதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.





கனடா முரசு

வெள்ளிக்கிழமை | 13/06/2025

## மகனை கடத்திய தந்தை கைது

கடனாவில் மகனை கடத்திய தந்தை ஒருவரை அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

இந்தியாவில் தனது மூன்று வயது மகனை நீதிமன்ற உத்தரவை மீறி 02▶






# போதைப்பொருள்கள் கடத்தும் கும்பலை சேர்ந்த 9 பேர் கைது

கனடாவில் போதைப்பொருள் கடத்தல் கும்பலை சேர்ந்த 9 பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் மிகப்பெரிய சதி செயல் முறியடிக்கப்பட்டு உள்ளது என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கனடாவில் போதைப்பொருள் கடத்தலுக்கு எதிராக பொலிஸார் நடத்திய சோதனையில், கனடாவில் குடியேறிய இந்திய வம்சாவளியைச் சேர்ந்த 7 பேர் உட்பட மொத்தம் 9 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களிடம் இருந்து 47.9 மில்லியன் டொலர் மதிப்புள்ள 479 கிலோ கொகெயின் போதைப் பொருள் பறிமுதல் செய்யப்பட்டது. 02▶



# இ-ஸ்கூட்டர் விபத்தில் இளைஞர் உயிரிழப்பு

கனடாவின் பிக்ரிங் பகுதியில் இடம்பெற்ற ஈ ஸ்கூட்டர் விபத்தில் 21 வயது இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

தனது இ-ஸ்கூட்டரில் பயணம் செய்தபோது, வாகனமொன்றில் மோதியதில், பலத்த காயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, ஐந்து நாள்கள் கழித்து உயிரிழந்தார் என ஒன்ராறியோ மாகாண பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்து, கடந்த 4ம் திகதி பிக்ரிங் பகுதியில் உள்ள லிவர்பூல் சாலை ஓன்ராம்பில் இடம்பெற்றுள்ளது.

அப்போது, இளைஞர் தனது இ-ஸ்கூட்டரில் ஓன்ராம்பைக் கடக்க முயன்றபோது, எதிர்பாராதவிதமாக ஒரு வாகனம் மோதி விபத்து ஏற்பட்டது.

தீவிர காயமடைந்த இளைஞர், உடனடியாக டொரொன்டோ பகுதியிலுள்ள சிகிச்சை மையத்துக்கு மாற்றப்பட்டார். ஆனால், அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

விபத்தினை மேற்கொண்ட வாகன ஓட்டுநர், விபத்திற்குப் பிறகும் சம்பவ இடத்திலேயே இந்து விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த சம்பவம் தொடர்பிலான விசாரணை முன்னெடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.



# அகமதாபாத் விமான விபத்தில் கனடிய பல் மருத்துவர் உயிரிழப்பு

இந்தியாவிற்கான பயண மொன்றை முடித்துவிட்டு டொரோண்டோவுக்குத் திரும்பிக் கொண்டிருந்த தருணத்தில், கனடிய பெண் வைத்தியர் நிராலி படேல் விபத்தில் உயிரிழந்துள்ளார்.

லண்டனை நோக்கிச் சென்ற ஏர் இந்தியா விமானம், இந்தியாவின் வடமேற்குப் பகுதியிலுள்ள குஜராத்தின் அகமதாபாத்தில் உள்ள ஒரு கல்லூரி மாணவர் விடுதியில் மோதி விழுந்தது.

இதில் விமானத்தில் பயணம் செய்த 241 பேரும் உயிரிழந்தனர்.

32 வயதான நிராலி படேல், எடோபிகோவ் பகுதியைச் சேர்ந்த பல் மருத்துவர் ஆவார். நிராலி அந்த Boeing 787-8 Dreamliner விமானத்தில் இருந்த ஒரே கனடா நாட்டவராக அடையாளம் காணப்பட்டுள்ளார்.

நிராலி இந்தியாவிற்கு நான்கு அல்லது ஐந்து நாள்கள் சென்றிருந்தார் எனவும் திரும்பிக் கொண்டிருந்தபோது இந்த துயரச் சம்பவம் நடந்துள்ளது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

நிராலியின் கணவர், தங்களது ஒரு வயது குழந்தையுடன் இந்தியா செல்ல விமானப் பயணத்தை ஏற்பாடு செய்து கொண்டிருந்துள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

நிராலி படேல், மிசிசாகாவில் உள்ள ஒரு பல் மருத்துவ நிலையத்தில் பணியாற்றி வந்துள்ளார்.

2016 ஆம் ஆண்டு இந்தியாவில் பல் மருத்துவ பட்டம் பெற்று, 2019 ஆம் ஆண்டில் கனடாவில் வைத்திய அனுமதி பெற்றவர் என Royal College of Dental Surgeons of Ontario தெரிவித்துள்ளது.

## மகனை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைத்திருந்த டர்ஹாம் பகுதியைச் சேர்ந்த 48 வயதான ஒருவர், கனடா திரும்பியவுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

அஷ்பெர்ன் பகுதியைச் சேர்ந்த கபில் சுனக் என்ற சந்தேகநபர், 2024 ஜூலை மாதம் தனது மகன் வலென்டினோவை அழைத்து டில்லிக்கு பயணம் செய்தார் என கூறப்படுகிறது.

ஆனால், நீதிமன்றம் வழங்கிய ஓஆகஸ்ட் 8 ஆம் திகதிக்குள் அவரை மீண்டும் கனடாவுக்கு அழைத்து வரத் தவறியுள்ளார்.

இந்த நிலையில், கபில் சுனக்குக்கு எதிராக பெற்றோர் கடத்தல் குற்றச்சாட்டு அடிப்படையில் பிடி விராந்து உத்தரவு இதற்கு முன்னரே பிறப்பிக்கப்பட்டிருந்தது.

இந்த வாரம், பியர்சன் சர்வதேச விமான நிலையத்தில் கனடா எல்லை பாதுகாப்பு முகமை அதிகாரிகளால் அவர் கைது செய்யப்பட்டார்.

அவரை கைது செய்யும் வகையில் முன்பே ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

சுனக்கிற்கு 14 வயதிற்குட்பட்ட குழந்தையை நீதிமன்ற உத்தரவை மீறி கடத்திய குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. ஜூன் 11ஆம் திகதி நீதிமன்றத்தில் அவர் ஆஜராகியிருந்தார்.



## போதைப்பொருள்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமெரிக்காவிலிருந்து கனடாவிற்கு போதைப்பொருள் கடத்தல் விசாரணையில், இந்த கும்பல் அமெரிக்காவிலிருந்து, கனடாவிற்கு பாரவூர்திகளில் போதைப்பொருள் கடத்துவது அம்பலம் ஆனது. துப்பாக்கி மற்றும் போதைப்பொருள் கடத்தல் தொடர்பாக இந்த கும்பல் மீது கனடா பொலிஸார் வழக்குப்பதிவு செய்துள்ளனர்.

டொராண்டோவைச் சேர்ந்த சஜ்கித் யோகேந்திரராஜா (வயது 31), பிராம்ப்டனைச் சேர்ந்த மன்பிரீத் சிங் (வயது 44) ஹாமில்டனைச் சேர்ந்த பிலிப் டெப் (வயது 39), பிராம்ப்டனைச் சேர்ந்த அரவிந்தர் பவார் (வயது 29), காலேடனைச் சேர்ந்த கரம்ஜித் சிங் (வயது 36), குருதேஜ் சிங் (வயது 36), கேம்பிரிட்ஜைச் சேர்ந்த சர்தாஜ் சிங் (வயது 27), ஜார்ஜ்டவுனைச் சேர்ந்த ஷிவ் ஓங்கர் சிங் (வயது 31), மிசிசாகாவைச் சேர்ந்த 27 வயது ஹாவோ டாமி ஹுய்ன் ஆகியோரே கைது செய்யப்பட்டுள்ளனர்.

"போதைப்பொருள் கடத்தலில் இருந்து கிடைக்கும் வருமானத்தை இந்தியா எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு நிதியளிக்கப் பயன்படுத்தி உள்ளனர். இதனால் மிகப்பெரிய சதி செயல் முறியடிக்கப்பட்டு உள்ளது." என பொலிஸார் தெரிவித்தனர்.




### மிகப்பெரிய போதைப்பொருள் பறிமுதல்:

# 25 வயது இளைஞன் ஒருவருக்கு 16 ஆண்டுகள் சிறைத்தண்டனை

கனடாவில் இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட மிகப்பெரிய போதைப்பொருள் பறிமுதல் வழக்குகளில் ஒன்றில், 25 வயதான டைமூர் பாஷா என்பவருக்கு 16.5 ஆண்டுகள் சிறைத்தண்டனை லண்டன் நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்டது.

கடந்த 2023 ஜனவரி மாதம், "Project Oasis" என்ற குற்ற விசாரணையின் போது பாஷா கைது செய்யப்பட்டார்.

அவர்மீது போதைப்பொருள் கடத்தல், தடைசெய்யப்பட்ட ஆயுதங்களை வைத்திருத்தல் உள்ளிட்ட பல குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டிருந்தன.

நீதிமன்றத்தில் எடுத்துரைக்கப்பட்டபோது, லண்டனில் பிறந்து வளர்ந்த பாஷா, 'ஓசாமா' என்ற புனைப்பெயரில் லண்டன் மற்றும் சார்னியா பகுதிகளில் கோக்கெயின், பென்டனில், மற்றும் மெத்தாம்பட்டமின் போன்ற போதைப் பொருட்களை விற்பனை செய்ததாக குற்றம் சுமத்தப்பட்டது.

சோதனையின் போது 15 கிலோ பென்டனில், 3 கிலோ கோக்கெயின் என்பன மீட்கப்பட்டதாகவும் இவை அனைத்தினதும் சந்தைப் பெறுமதி 3.2 மில்லியன் டொலர்கள் மதிப்பு என மதிப்பீடு செய்யப்பட்டது.

2023 நவம்பரில், பாஷா தனது மீதமுள்ள ஒரு குற்றச்சாட்டுக்கு (போதைப் பொருள் விற்பனை நோக்கில் வைத்திருத்தல்) குற்றத்தை ஒப்புக்கொண்டார்.

"பாஷா ஒரு மொத்த வணிகக் கடத்தலாளியாகச் செயல்பட்டுள்ளார். லண்டனில் நிலவும் ஓபாயிட் (opioid) நெருக்கடியையும் கருத்தில் கொண்டு தண்டனை அளிக்கிறேன் என நீதிபதி தெரிவித்துள்ளார்.

# கனடாவில் மூன்று நாள்களில் மூன்று பேரை கொன்ற பெண்

கனடாவில், அடுத்தடுத்த மூன்று நாட்களில் மூன்று பேரைக் கொலை செய்தார் ஒரு பெண்.

கனடாவின் ரொரன்றோவில், கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் 1ஆம் திகதி, Trinh Thi Vu (வயது 66) என்னும் பெண் சடலமாக மீட்கப்பட்டார்.

அடுத்த நாள், அதாவது, அக்டோபர் மாதம் 2ஆம் திகதி, ஒன்ராறியோவில் Lance Cunningham (வயது 47) என்பவர் படுகாயமடைந்த நிலையில் கண்டெடுக்கப்பட்டார். சிறிது நேரத்தில் அவர் உயிர் பிரிந்துவிட்டது.

அக்டோபர் மாதம் 3ஆம் திகதி, ஹாமில்ட்டனில் Mario Bilich (வயது 77) என்னும் நபர் படுகாயமடைந்த நிலையில் மீட்கப்பட்டார். பின்னர் மருத்துவமனையில் அவர் உயிரிழந்துவிட்டார்.



மறுநாள், இந்த கொலைகள் தொடர்பில் சப்ரினா (வயது 30) என்னும் பெண் கைது செய்யப்பட்டார்.

சப்ரினா மன நல மருத்துவர்களால் பரிசோதனைகளுக்குட்படுத்தப்பட்ட நிலையில், மார்ச் மாதம் அவர் விசாரணைக்குட்படுத்தப்படும் மன நிலையில் இல்லை என நீதிபதி ஒருவர் தீர்ப்பளித்திருந்தார்.

அதைத் தொடர்ந்து சப்ரினாவுக்கு 60 நாள்கள் மன நல சிகிச்சையளிக்கப்பட்டது.

இந்நிலையில், மருத்துவ நிபுணர்களைக் கலந்தாலோசித்தபின், Justice Russell Silverstein என்னும் நீதிபதி, சிகிச்சைக்குப் பின் சப்ரினாவின் மன நிலையில் முன்னேற்றம் காணப்படுவதாகவும், ஆகவே அவர் தற்போது விசாரணைக்குட்படுத்தப்படலாம் என்றும் தீர்ப்பளித்துள்ளார்.